தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

புதன்கிழமை, 1979 நவம்பர் 7.

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்--விடைகள்.

தேனித் தொகுதியில் பாசன வசதி.

குறுகிய கால வினா எண் 4 திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனித் தொகுதியில், கிளை வாய்க்கால் திட்டம் (Contour Canal) பல கிராமங்களின், புஞ்சை நிலங்களுக்கு பாசன வசதியும் அங்குள்ள கிணறுகளுக்கு நீரூற்றுகளும் கிடைக்கும் வகையில் விரைவில் செயல்படுவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டத்திலுள்ள பி. டி. ராஜன் வாய்க்காலிலிருந்து ஒரு கிளைக் கால்வாய் வெட்டும் குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால் எத்தனை ஏக்கர் நிலங்கள் பயனடையும்? இத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு? எப்போது இத் திட்டம் செயல்படத் துவங்கும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இத் திட்டத்தினால் வெங்கிடாசலபுரம் பகுதியில் சுமார் 1,600 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும். திட்டத்தின் தோராய செலவு மதிப்பீடு 26 லட்சம் ரூபாய். இதை உடனடியாகச் செயல்படுத்துவதற்கு வேண்டிய செயற்குறிப்புகள் இந்த அரசின் பரிசிலனையில் இருந்து வருகிறது.